श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः
श्रीमते श्रीवण्शठकोपश्रीवेदान्तदेशिकयतीन्द्रमहादेशिकाय नमः
श्रीमते श्रीलक्ष्मीनृसिंहदिव्यपादुकासेवक श्रीवण्शठकोपश्रीनारायणयतीन्द्रमहादेशिकाय नमः
श्रीमते श्रीवण्शठकोपश्रीरङ्गनाथयतीन्द्रमहादेशिकाय नमः

## 45ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் - ஆஶ்ரமநிர்வாஹஸ்வீகாரத்தின் 20-வது ஆண்டு நிறைவு உத்ஸவத்தில் ஸமர்ப்பிக்கப்படும் விஜ்ஞாபநம்

## श्रीमतां श्रीलक्ष्मीनृसिंहदिव्यपादुकासेवक श्रीवण्शठकोपश्रीनारायणयतीन्द्रमहादेशिकानां श्रीमन्मालोलदिव्यास्थाननिर्वाहपट्टाभिषेक-विंशत्यब्दपूर्तिसमारम्भे समर्प्यमाणा विज्ञप्तिः

*ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய, பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீபகவத்ராமானுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக, ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேஶிகனின் - 45ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் - ஆஶ்ரமநிர்வாஹஸ்வீகாரத்தின் 20-வது ஆண்டு நிறைவு உத்ஸவத்தில் ஸமர்ப்பிக்கப்படும் விஜ்ஞாபநம்*

मालोलदिव्यपादूनां सेवका वण्शठारयः । नारायणयतीशाना विंशत्यब्दाः समिन्धते ॥ 1 ॥

*மாலோலனின் திவ்யபாதுகைகளின் ஸேவகரான ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேஶிகன், 20 வருடத்தினவராய் விளங்குகிறார். அதாவது, இளமையை எய்தி உள்ளார். நித்யஸூரிகளைப் போன்று நித்யயுவாவாகவும்,* 'तद्विप्रासो विपन्यवो जागृवाँसः समिन्धते', 'पञ्चहायनमात्रेण पूर्वेषामपि पूर्वजाः', 'स्वयमागतविज्ञानाः निवृत्तिं धर्ममाश्रिताः' *எனக்கொண்டாடப்படும் மஹிமை உள்ளவர்களான ஸநகாதியர் நால்வரும் தலா 5 வருட வயஸ்ஸினவராய் இருப்பதால் அவர்கள் நால்வரும் ஒருங்கிணைந்து 20 வருடத்திய ஸ்ரீமதழகியசிங்கராய் விளங்குதல் தோன்றும். ஸநகர், ஸநந்தநர், ஸநத்குமாரர் மற்றும் ஸநத்ஸுஜாதர் எனும் நால்வர் மஹாஜ்ஞானிகளும், நிவ்ருத்தி தர்மத்தை ஏற்றவர்களுமாதலால் அவர்களை ஒத்தவராய் ஸ்ரீமதழகியசிங்கர் திகழ்கிறார்.*

वेदान्तदेशिकयतीन्द्रकृपाभिजाताः नारायणाख्ययतिधुर्ययशोवितानाः ।
मालोलवैभवसमेधनसुप्रसिद्धाः मानातिलङ्घिमहिमान अहोऽतिभान्ति ॥ 2 ॥

*ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்தில் 44ம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரால் கருணையுடன் மடத்தின் அபிவ்ருத்திக்காக ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாராயணயதீந்த்ரமஹாதேஶிகனெனப் பாரெங்கும் புகழப்படும் பெருமை கூடியவர். மாலோலனின் வைபவத்தை, ஐஶ்வர்யத்தை - அதாவது, ஸொத்துக்களையும் ஶிஷ்யஸம்பத்தையும் பலமடங்கு அதிகரிக்கும்படி செய்வதில் நிகரற்றவர். அன்னாருடைய பெருமை நம்போலியர்களின் சொல்லுக்கும் மனத்திற்கும் அப்பாற்பட்டது. இப்படிக்கொத்த ஸ்ரீமதழகியசிங்கர் வெகுவாகப் ப்ரகாஶிக்கிறார்.*

विंशत्यब्देषु तावद्विहितनरहरेरर्चना ये निकामं प्रायः पृथ्वीं रघुवरकृतात्सेतुतो धूतपापाम् ।
वारंवारं हिमगिरिवसत्यष्टवर्णार्हदेवस्थानं यावद्विहितचरणाः संचरीणाः पुनन्ति ॥ 3 ॥

*இந்த இருபது ஆண்டுகளில் ஸ்ரீமந்மாலோலனின் கைங்கர்யத்தைத் திறம்பட நடத்திக்கொண்டிருக்கச் செய்தே பலதடவை சக்ரவர்த்தித் திருமகனால் அமைக்கப்பட்ட,* 'सकृदवेक्षणात् तत्क्षणात् प्रकृष्टबहुपातकप्रशमहेतुना सेतुना' *என்று ஒருமுறை பார்த்தாலே நம் எல்லா பாபங்களையும் போக்குகிற ஸ்ரீஸேதுவிலிருந்து நாடெங்கும் ஸஞ்சாரமாகப் பெரிய பெருமாளான மாலோலனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஶிஷ்யர்களை அனுக்ரஹித்துக் கொண்டாகி இருக்கிறது. இமயமலையில்*

மஹாமந்த்ரமாகிற ஸ்ரீமதஷ்டாக்ஷரத்துக்கு ரிஷியும் தேவதையுமான, திருமங்கை ஆழ்வாரால் முந்துற முன்னம் மங்களாஶாஸனம் பண்ணப்பட்ட, பத்ரிநாதனான ஸ்ரீமந்நாராயணனின் ஸந்நிதி வரை ஸஞ்சாரம் செய்து தர்மத்தைக் காத்தாகிறது.

இங்கு, பெரியாழ்வார், 'நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்கள் உழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே' எனக் கூறியபடியும், யதிராஜஸப்ததியில் ஸ்வாமி தேஶிகன் எம்பெருமானார் விஷயமாக ஸாதித்த 'भिक्षापर्यटनक्षणेषु बिभरां चक्रे गळत्किल्बिषा यद्विन्यासमिषेण पत्रमकरीमुद्रां समुद्राम्बरा' என்று மாதுகரத்துக்கு எழுந்தருளும் போது திருப்பாவை அநுஸந்தானம் மானஸீகமாக நடப்பதால் பாதுகையை சாற்றிக் கொள்ளாமல் எழுந்தருளும் கால், பார் மங்கையே அவருடைய திருவடி ஸம்பந்தத்தால் ஸமாஶ்ரயணம் செய்யப் பெற்றாளோ என நினைக்க வைக்கிறது எனவும் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது.

विंशत्यध्याययुक्ता विहितविशदसद्धर्ममीमांसकानां नीतिर्याऽसौ समग्रा व्यवृणुत परमं सिद्धसाध्यप्रभेदात् ।
तां वेदान्तार्यसूरिः स्वकृतनुतिवचोगोचरं यं व्यधात्तद्देवस्यादेः गुणौघाननुकरणचणाः संयमीन्द्रा जयन्ति ॥ 4 ॥

தர்மம் வேதத்தைக் கொண்டே அறியத்தக்கது. அதன் பொருளை விவரிக்க மீமாம்ஸா ஶாஸ்த்ரம் ஏற்பட்டிருக்கிறது. 'धर्मे प्रमीयमाणे हि वेदेन करणात्मना । इतिकर्तव्यताभागं मीमांसा पूरयिष्यति ॥'. அது எம்பெருமானே தர்மம் எனவும், தர்மஸ்வரூபத்தை ஸித்த தர்மம் ஸாத்ய தர்மம் என இருவகைப்படுத்தி ஆறும் பயனுமாக இருப்பதைத் தெரிவிக்கிறது. 'अथातो धर्मजिज्ञासा', 'अथातो ब्रह्मजिज्ञासा' இந்த மீமாம்ஸா ஶாஸ்த்ரம் 'कर्म-देवता-ब्रह्मगोचरा सा त्रिधोद्बभौ सूत्रकारतः । जैमिनेः मुनेः काशकृत्स्नतः बादरायणादित्यतः क्रमात्' ஜைமினி, காஶக்ருத்ஸ்ந, வ்யாஸர்களால் இயற்றப்பெற்ற கர்ம, தேவதா, ப்ரஹ்ம மீமாம்ஸையென மூவகையாய், முறையே 12, 4 மற்றும் 4 அத்யாயங்களைக் கொண்டதாய், ('संहितमेतच्छारीरकं जैमिनीयेन षोडशलक्षणेनेति शास्त्रैकत्वसिद्धिः' इति द्रमिडभाष्यकाराः) இருபது அத்யாயங்களால் கூடி இருந்து, தர்மத்தை முழுவதும் நன்கு அறிய உதவுகிறது. 'धर्मधीः मान, भेद, अङ्ग, प्रयुक्ति-क्रम-कर्तृभिः । सातिदेश-विशेष-ऊह, बाध-तन्त्र-प्रसक्तिभिः ॥', 'स्वरूपमादौ, तद्भेदः, तदुपासनपूर्वकम् । फलं च देवताकाण्डे देवतानां तु कथ्यते ॥', 'कारणत्वम्, अबाध्यत्वम्, उपायत्वम्, उपेयता । इति शारीरकप्रोक्तम् ॥'. இதில் 20 அத்யாயங்களால் விவரிக்கப்பட்டது தர்மமாகிய ப்ரஹ்மம். அது சேதனாசேதனவிஶிஷ்டம், எனவும் தெளிவிக்கிறது. 'ये च वेदविदो विप्राः ये चाध्यात्मविदो जनाः । ते वदन्ति महात्मानं कृष्णं धर्मं सनातनम् ॥'. இது பூர்வார்தத்தின் பொதுவான பொருள்.

அதை ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் மீமாம்ஸாபாதுகையில் 'वेद्यं वेदैरशेषैः विधि-तदितरयोः विश्वमाप्याययन्तं धर्मैः आराधनीयं पितृ-सुर-मुखतः शाश्वतं धर्ममेकम् । साङ्गाधीताक्षरौघ-स्वरस-समुदितापात-धीजात-रागात् मीमांसेम-ह्यनन्तं व्यवहितवपुषं कञ्चुकैरुज्झितं च ॥' என்றும், ந்யாஸவிம்ஶதியில் 'विंशत्या न्यासविद्यां व्यवृणुत सुधियां श्रेयसे वेङ्कटेशः ।' என பரமஹிதமான ப்ரபத்தியை வேத, ஶாஸ்த்ரங்களின் திரண்ட பொருளாகவும், द्रमिडोपनिषत्तात्पर्यरत्नावळियில் 'आदौ शारीरकार्थक्रममिह विशदं विंशतिर्वक्ति साग्रा' என திருவாய்மொழியின் ஆரம்பத்தில் உயர்வற, வீடுமின் (1.1, 1.2) பதிகங்கள் வேதாந்தார்தத்தை விளக்குகின்றன என்றும், பலவாறாக தன் ஸ்தோத்ரரூபமான க்ருதிகளில் உபயவேதாந்தத்திலும் இருபதின் மேன்மையை அறிவிக்கிறார்.

இனி க்ருஷ்ணன், நாராயணன் என மீமாம்ஸையில் பூர்வ, உத்தரகாண்டங்களில் போற்றப்படுகிறான் பகவான் எனக் காட்டுவதற்காகத் தான் இயற்றிய கோபாலவிம்ஶதியில் க்ருஷ்ணனை மீமாம்ஸையின் இருபது அத்யாயங்களால் அறியத்தக்கவன் என இருபது ஶ்லோகங்களை அருளி உள்ளார். இது மஹாவித்வான்களான ஸ்ரீ. உ.வே. அன்பில் கோபாலாச்சாரியார் மற்றும் ஸ்ரீ. உ.வே. க்ருஷ்ணதாதாசார்ய ஸ்வாமியாலும் இயற்றப்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத, கன்னட மொழிகளில் அமைந்த வ்யாக்யானங்களில் காணக் கிடைக்கிறது.

'कृष्णद्वैपायनं व्यासं विद्धि नारायणं प्रभुम् ।' என்று க்ருஷ்ணத்வைபாயநரான வ்யாஸரே நாராயணன் என்பதும், 'व्यासाय विष्णुरूपाय व्यासरूपाय विष्णवे ।' என்று விஷ்ணுவே வ்யாஸர் என்றும் சொல்லப்பட்டுள்ளதால் க்ருஷ்ணனாக தர்மஸ்வரூபியும், க்ருஷ்ணத்வைபாயனராக அந்த தர்மத்தை விவரிக்கும் ஸூத்ரங்களை 'यः पूर्वोत्तरमीमांसे स्वशिष्येण स्वयं क्रमात् । सूत्रयामास तं व्यासं मीमांसे विष्णुरूपिणम् ॥' என ஸாக்ஷாத்தாகவும் ப்ரயோஜகராகவும் இயற்றியதனாலும் அமரகோஶத்திலும் 'विष्णुः नारायणः कृष्णः वैकुण्ठः' என்ற வரிசை வெறும் காகதாலீயமல்லாமல் முற்சொன்ன விஷயத்தில் நோக்கற்பாலது. ந்ருஸிம்ஹனை 'वैकुण्ठकण्ठीरवः' என்றார் ஸ்வாமி ஶ்ரீதேஶிகன்.

ஆக, ந்ருஸிம்ஹன் 'सत्यं विधातुं .... व्याप्तिं च भूतेष्वखिलेषु चात्मनः', ஸர்வவ்யாபி; விஷ்ணு 'वनानि विष्णुः भुवनानि विष्णुः .... विष्णुः यदस्ति यन्नास्ति च विप्रवर्य', ஸர்வாத்மகன்; 'यच्च किञ्चित् जगत्यस्मिन् दृश्यते श्रूयतेऽपि वा । अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः', நாராயணன் ஸர்வவ்யாபீ; 'कृषिर्भूवाचकः शब्दः णश्च निर्वृतिवाचकः ।', க்ருஷ்ணன் எல்லாவித புருஷார்த்தங்களையும் கொடுப்பவன், எல்லோரையும் ஆகர்ஷிப்பவன். பகவானுடைய ஸௌலப்யம் - எளிமை/நீர்மை, மற்றும் பரத்வம் - உயர்வு, பெருமை - இவை இரண்டும் முறையே க்ருஷ்ண, நாராயண சொற்களால் அறியப்படுகிறது.

ஸ்வாமி ஶ்ரீதேஶிகன் காட்டிய க்ருஷ்ண, நாராயண ஶப்தங்களின் பெருமையை நம் ஶ்ரீமதழகியசிங்கர் பூர்வாஶ்ரமத்திலும், ஸந்யாஸாஶ்ரமத்திலும் அவ்வோ திருநாமங்களுடன் திகழ்ந்து நிரூபித்தாகிறது. 'பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து' என்னும்படி தேவ, ஆசார்ய அபேதம் சொல்லப்பட்டதிறே. 'अध्यासीनतुरङ्गवक्रविलसज्जिह्वाग्रसिंहासनात् आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे', 'देवमिव ह्याचार्यमुपासीत', 'दैवं मानुषरूपेण', 'आचार्यः सद्भिरप्रत्युपकरणधिया देववत् स्यादुपास्यः' முதலியன இவ்விஷயத்தில் ப்ரமாணங்கள்.

अब्दैर्विंशतिसंख्यातैः अत्याश्चर्यमयैरहो । मालोलवैभवं विश्वविख्यातं विस्तृतं बहु ॥ 5 ॥

இருபது அத்யாஶ்சர்யமயமான வருடங்களில் மாலோலனின் வைபவம், அதாவது, வ்யாப்தி மற்றும் ஐஶ்வர்யம் பலமடங்கு வளர்ந்துள்ளது. என்னே ஆஶ்சர்யம்.

सुवर्णयुक्तवाग्योगाः श्रुत्योरानन्दकारकाः । सुवर्णमयमातेनुः स्वहोबिलमठश्रियम् ॥ 6 ॥

உயர்ந்த எழுத்துக்களோடு கூடியிருந்து, தகுந்த பேச்சாளரான ஶ்ரீமதழகியசிங்கர், இரு செவிகளுக்கும் பெருமகிழ்ச்சியை விளைவிக்கிறார். ஶ்ரீமதஹோபிலமடத்தின் செல்வத்தை தங்கமயமாக்கியிருக்கிறார். இங்கு வாக்கில் ஸுவர்ணம் இருப்பதென்பது தங்கத்தைப்போன்ற - உயர்ந்த - அல்லது தங்கத்தை உட்கொண்டது. யுக்தமென்று தனித்தும், அடைமொழியாயும் வாக்குடன் பொருந்தும். மஹாபாஷ்யத்தில் சொற்குற்றங்களை விலக்கக்கூறுங்கால் 'वाग्योगविद्दुष्यति नापशब्दैः' என்று கூறப்பட்டுள்ளது. ஶ்ருத்யோ: - இரு செவிகளுக்கு அல்லது மறைகளுக்கு - அதாவது, உபயவேதாந்தத்துக்கும், மகிழ்ச்சி அளித்தல். 'செவிக்குணவு இல்லாத போது' முதலியன நினைக்கத்தக்கன. ஸுவர்ணமயமென்றவிடத்து 'மயட்' விகுதி ப்ராசுர்யம், ஸ்வரூபம் முதலிய பொருள்களில் காண்க. நன்கு அல்லது நல்ல அஹோபிலமடத்தின் செல்வம்.

आद्यन्ते श्रीसमेताः शठरिपुमहितास्थाननिर्वाहयुक्ताः धीमन्तो वाग्विलासैः सुनिशितधिषणावर्जितस्वान्तशिष्याः ।
विद्वद्गोष्ठीष्वनेकास्वनितरसुलभप्रज्ञया क्लिष्टचोद्यानायासाभावतो ये निगमयुगमुखे प्रत्यवोचन्नमस्तान् ॥ 7 ॥

'श्रीशठकोपश्रीः' என்னும் ஆழ்வாரால் அருளப்பெற்ற அஸாதாரண செல்வத்துடன் கூடி, மடாஸ்தானத்தை நிர்வஹித்துக் கொண்டு தம் பெருமையுடைய மேதாவிலாஸத்தாலும் மிகுந்த கூர்மதியாலும் ஶிஷ்யர்களின் மனங்களைக் கவர்ந்தவராய், மஹாவித்வான்களின் பல கோஷ்டிகளிலும், ஸபை, ஸதஸ்களிலும் தன் விலக்ஷணமான ஜ்ஞானத்தால் ந்யாய ஶாஸ்த்ர, தர்ம ஶாஸ்த்ர, உபயவேதாந்த

*க்ரந்தங்களிலும் வெகு கடினமான கேள்விகளுக்கும் 'அப்போது ஒரு சிந்தை செய்தே' என்னும்படி அநாயாஸமாக, தெளிவாகத் தகுந்த, சீரிய ஸமாதானம் ஸாதிக்கும் ஸ்ரீமதழகியசிங்கரை கரணத்ரயத்தாலும் பக்தியுடன் வணங்குவோம். மதாந்தரஸ்தர்களுடன் வாக்யார்த்தத்திலும் பலவகையாக சோத்யம் செய்து இறுதியில் ஸித்தாந்தத்தின் சீர்மையைப் பறைசாற்றும் பாங்கு அனுபவிக்கத்தக்கது.*

हिरण्यदानसंसक्तं मालोलं मुनिपुङ्गवाः । हिरण्ययोजनेनैते प्रीणयन्त्याः किमद्भुतम् ॥ 8 ॥

'विकृतिमर्भकनिर्भजनादगाः' *என்கிறபடி கோபத்தால் ஹிரண்யாஸுரனைக் கொன்ற ந்ருஸிம்ஹனிடத்து பக்திப் பெருக்கிருந்தும் அவனுக்குப் ப்ரீதியை விளைவிக்க, ஹிரண்யத்தையே - தங்கத்தையே, ஸமர்ப்பிக்கிறார். என்னே ஆஶ்சர்யம்? ஹிரண்யம் - ஹிரண்யாஸுரன், தங்கம். தானம் - கொடுத்தல், கீளல். ஸம்ஸக்தி - ஆசை. யோஜனம் - சேர்ப்பித்தல். ஹிதம் - நன்மை பயப்பது, மற்றும் ரமணீயம் - அழகியது, ஹிரண்யம் எனப் பெறுகிறது என யாஸ்க முனிவர் நிருக்தத்தில் கூறுகிறார். 'அழகியான் தானே அரியுருவன் தானே' அழகியசிங்கன்/ர்.*

बहुत्र बहुधा सम्यङ्मठवैभवविस्तरम् । वर्धयन्त्यन्वहं चैते नारायणयतीश्वराः ॥ 9 ॥

*பலவிடங்களில், பலவகைகளில் ஸ்ரீமதஹோபிலமடத்தின் பெருமையை நாள்தோறும் ஸ்ரீநாராயணயதீந்த்ரமஹாதேஶிகர் அமோகமாக வளர்த்து வருகிறார். இந்த அழகியசிங்கரின் காலத்தில், அதாவது, கடந்த 20 ஆண்டுகளில், பல புதிய க்ஷேத்ரங்களில் புதிய மடங்கள் கட்டப்பட்டுள்ளன. பல பழைய மடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பலவித ஸௌகர்யங்கள் எல்லாவிடத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நைமிஶாரண்யத்திலிருந்து ஸேது - திருப்புல்லாணி, வரை ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் நம் மடங்கள் உள்ளன. திருமங்கை ஆழ்வாருக்கு அரிய அஹோபிலக்ஷேத்ரம் 'சென்று காண்டற்கு எளிய கோயிலா'கி விட்டது. கடப்பா, பத்ராசலம், அடியேன் ஸ்ரீக்ராமம் - சோகத்தூர், உட்பட எல்லாம் மடவசதிகளுடன் கூடி உள்ளன. பக்தர்களுக்கு தீர்த்த, க்ஷேத்ர யாத்ரிகளுக்கு மிகவும் இந்த கைங்கர்யத்தால் உதவி ஏற்பட்டுள்ளது. சேலையூரில் வேத, ப்ரபந்த பாடசாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. லௌகிகவித்யைக்காகவும் மதுராந்தகத்தில் புதிய கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.*

करणैस्त्रिभिरप्येषां सेवनं शुद्धभावतः । पावनं स्पृहणीयं च स्वरूपोचितमञ्जसा ॥ 10 ॥

*இப்படிப்பட்ட லோகோபகாரகரான இவ்வழகியசிங்கரின் பணிவிடை முக்கருவிகளாலும் - 'உள்ளம், உரை, செயல்' இவற்றால், நல்ல மனத்துடன் செய்தல் நமக்கு பாவங்களை உடனே, அறவே, அகற்றும். இது பரமைகாந்திகளும் ஆசைப்படத்தகுந்தது. மேலும் உண்மையில் நம் ஸ்வரூபத்துக்குப் பொருந்தியதுமாம்.*

धन्या वयं ये रमणीयसिंहं रमणीयचर्यैरभिपूजितं ज्योक् ।
युवानमेनं द्विदशं समाभिः आचार्यवर्यैः सह संगमेम ॥ 11 ॥

*நாம் பெரும் பாக்கியஶாலிகள். ஏனெனில், இந்த ஆசார்யஶ்ரேஷ்டருடன் நாமும் அவரை முன்னிட்டுக் கொண்டு, அவரால் மிக உயர்ந்த முறையிலே ஆராதிக்கப்படும் இருபது வயதினனான, 'யுவா ஸுவாஸா:' என்கிறபடி, வானிளவரசான மாலோலனை அடைந்து அனுபவித்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம். அழகியசிங்கனை, அழகியசிங்கரால் பூஜிக்கப்படுமவனை, அடைக்கலம் புகுகிறோம் என்றபடி. 'ஆளும் அடைக்கலம் என்றெம்மை அம்புயத்தாள் கணவன் தாளிணை சேர்ந்து எமக்கும் அவை தந்த தகவுடையார்' அழகியசிங்கர்.*

आचार्यलक्षणोपेताः आचारस्थापनोत्सुकाः । आह्निकादिबहुग्रन्थलेखनाद्यैः पुनन्ति नः ॥ 12 ॥

*ஆசார்யனுக்கு இருக்க வேண்டிய எல்லா நற்பண்புகளுடனும் கூடியவர்.* 'यदेकैकगुणप्रान्ते श्रान्ताः

निगमवन्दिनः ।' யாருடைய ஒவ்வொரு குணத்தை மட்டும் சொல்லக் கிளம்பிய மறைகள் சோர்ந்து போய் விட்டனவோ என்றும், 'त्रय्यन्तप्रतिनन्दनीयविविधोदन्ताः .... देशिकाः ।' தங்களுடைய அப்பழுக்கற்ற, வேதோக்த மார்கத்தைக் கடைப்பிடிப்பதால் வேதாந்தங்களில் வெகுவாகக் கொண்டாடப்பட்டவர்கள் ஆசார்யர்கள் என ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் ஸாதித்த படி, தன்னை அண்டினவர்களை ப்ராசீன ஆசாரத்தை கடைப்பிடிக்க வைப்பவர். அறிவித்தல், தெளிவித்தல், எடுத்துக் காட்டாக இருத்தல், பல நூற்களிலிருந்து அரிய, பெரிய, உயர்ந்த பொருள்களைத் திரட்டி அறிவிலிகளுக்கும் புரியும்படிப் பாங்காக சீராக்கித் தருதல், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இன்றியமையாத அன்றாடச் செயல்களை அறிவிக்கும் ஆஹ்நிகம் முதலிய பல க்ரந்தங்களை எழுதி பரம உபகாரம் செய்தல் ஆகிய திருப்பணிகளால் எம்பெருமான் உகப்பை எய்தும் ஸ்ரீமத் அழகியசிங்கர் நம்மெல்லோரையும் 'தர்ஶனாதேவ ஸாதவ:' என்னும்படி தன் திவ்யகடாக்ஷத்தாலும் சரிதத்தாலும் தூய்மைப்படுத்துகிறார்.

समाधिकदरिद्रा ये क्लिष्टशास्त्रीयगोचरे । लेखने विशदं हृद्यं दैव्या चागस्त्यया गिरा ॥ 13 ॥

'ஒத்தார் மிக்காரை இலா'ர் நம் அழகியசிங்கர், எம்பெருமானைப் போலவே. எப்படி என்னில், மிக்க கடினமான ஶாஸ்த்ர விஷயங்களிலும், ஸம்ஸ்க்ருதம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும், இருமறைகளிலும், மிகத் தெளிவாக, மனத்தைக் கவரும் வகையில், மனத்தில் நன்கு பதியும் வகையில், எழுதும் புலமையில், 'தானே தனக்கு உவமன்' என்னும்படி எழுந்தருளி இருக்கிறார்.

परःशतप्रबन्धैर्ये प्रख्याता मर्मभेदने । सरलेन पथा सूक्ष्मदुर्ज्ञेयांशेषु वित्तमाः ॥ 14 ॥

நூற்றுக்கணக்கான வ்யாஸங்களால் பலருக்கு அறியத்தக்க பல அரிய, உயர்ந்த, நுண்ணிய பொருட்கள் எளிதாக்கப் பட்டுள்ளன. இதனால் பண்டிதோத்தமரான ஸ்ரீமத் அழகியசிங்கர் பெரும்புகழ் அடைந்துள்ளார்.

पुराणरत्नं मन्त्राणां त्रयसारं च भारतम् । द्रामिडीः सूरिगाथाश्च त्रय्यन्तयुगगोचरान् ॥ 15 ॥

விஷ்ணு புராணம், ரஹஸ்ய த்ரய ஸாரம், மஹாபாரதம், ஆழ்வார் அருளிச்செயல்கள், காலக்ஷேப க்ரந்தங்கள் என பலவகைப்பட்ட நூல்களை எளிதாகப் படைத்திருக்கிறார்.

विषयान् धर्मशास्त्रादीन् शारीरकमितानपि । सुधीप्रियकरत्वेन मनोहरवचोयुजा ॥ 16 ॥

தர்மஶாஸ்த்ர விஷயத்தில் - ஆசார, அனுஷ்டான ஸம்பந்தப்பட்ட விஷயத்தில், ஸந்தேஹ பரிஹாரம், 'ஸுதீப்ரியா' என்ற உரையுடன் மனங்கவரும் வண்ணம் எழுதி உள்ளார். வேதாந்தத்திலும் 'பராயத்தாதிகரணம்' முதலிய அவசியம் அறியத்தக்க, ஆனால் வெகு சிக்கலான விஷயங்களையும் மிகச் சீரிய, தனக்கே அஸாதாரணமான, எளிய பாணியில் வடித்துள்ளார்.

शैल्या ललितया सम्यक् अवबोधनशीलया । पामराणामपि परं स्पष्टीकुर्वन्ति हृद्गतान् ॥ 17 ॥

அழகியசிங்கரின் தனிப்பட்ட பாணிக்கு எடுத்துக்காட்டாக திருப்பாவை வ்யாக்யானம், ஸங்க்ஷேப ராமாயண உரை, அருள்மொழிகள் சிலவற்றைக் குறிக்கிறேன். திருப்பாவை உபந்யாஸக் குறிப்பில் 'பாவை' என்ற சொல்லின் பொருளை விளக்க தமிழ் இலக்கியத்திலிருந்து மேற்கோள்களுடன் மிக விரிவாக, முதன்முதலாக விளக்கி உள்ளார். பற்பல க்ரந்தங்களிலிருந்து தேனீ பலவகைப்பட்ட பூக்களிலிருந்து தேனை சேகரிப்பது போல் சேகரித்து - மாதுகர வ்ருத்தியாய், தொகுத்திருக்கிறார். ஸங்க்ஷேப ராமாயண வ்யாக்யானத்தில் 'ஸம: समविभक्ताङ्गः' என்ற சொற்றொடருக்குத் தான் எவ்வளவு விளக்கம்?, ஆஶ்சர்யம்! ஸாமுத்ரிக ஶாஸ்த்ரத்திலிருந்தும் ஸுந்தர காண்டத்தில் சிறிய திருவடி ஸீதாப்பிராட்டியிடம் சக்ரவர்த்தித் திருமகனின் அங்க, ப்ரத்யங்க ஸௌஷ்டவத்தை வர்ணிப்பதையும் சேர்த்துப் பல பக்கங்கள் விவரித்திருக்கிறார். எல்லாம் தெவிட்டாப் பேரின்பம். அருள்மொழிகளில்

*ஒவ்வொன்றும் விலைமதிப்பிட முடியாத ரத்னம். பணிமானம், நெடுமால், கைங்கர்யம், பக்தி, பட்டரின் அனுபவங்கள், ஈட்டில் ரஸோக்திகள், சது:ஶ்லோகீ வ்யாக்யானம் என, எதைச் சொல்வது?, எதை விடுவது? எனத் திகைக்க வைக்கின்றன. ஆஹ்நிகத்தில் தர்ப்பைப் புல்லால் பவித்ரம் செய்யும் முறையை ப்ரமாணங்களுடனும், படம் போட்டுக் காட்டும் படி தெளிவாக விளக்கி உள்ளது, 'ஶ்ரோத்ர', 'ஶ்ரௌத' ஆசமனம் இவற்றின் வேறுபாடு, 'ஆபோஶனம்' என்ற சொல்லின் வ்யாகரண விஶேஷத்துடன் விளக்கம், ப்ரஹ்ம யஜ்ஞ, மனுஷ்ய யஜ்ஞ முதலிய விஷயங்களில் பலபல அரிய விசாரங்கள், எல்லாம் தெள்ளத் தெளிவாகத் தமிழிலும் எழுதுவதென்பது ஒரு தனிக்கலை. திருமங்கை ஆழ்வார் 'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர், திசைமுகனை அனைய, செம்மை மிக்க அந்தணர்' எனக் கூறியது அழகியசிங்கரிடத்தில் நூற்றுக்கு நூறு பங்கு பொருத்தம்.*

कालक्षेप उपन्यासे वाक्यार्थे लेखनादिके । अर्चानुभव-कैङ्कर्ये प्रज्ञाशीलाश्चकासति ॥ 18 ॥

*காலக்ஷேபத்திலோ, உபந்யாஸத்திலோ, வாக்யார்த்தத்திலோ, எழுத்துத்திறனிலோ, அர்ச்சானுபவத்திலோ, கைங்கர்யத்திலோ எவ்வித செயலிலும் விலக்ஷணமான பாங்குடன் ஸர்வஜ்ஞராக விளங்குகிறார் நம் அழகியசிங்கர். ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்தை வளர்க்கப் பல முக்கியமான புத்தகங்களை ஆஹ்னிகம், தஶநிர்ணயீ, ஸந்த்யாவந்தனபாஷ்யம், தைத்திரீய சாகை முழுவதும் ஸஸ்வரமாக, நல்ல முறையில் வெளியிட்டுள்ளார். ஸ்ரீபாஷ்யம், ஶ்ருதப்ரகாஶிகை, பாவப்ரகாஶிகையுடன் ப்ரகாஶிப்பித்துள்ளார். கீதாபாஷ்யம் திருக்கள்ளம் ஸ்வாமியின் விரிவான உரையுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. மதுராந்தகத்தில் பாடசாலையை பலவகைகளில் அபிவ்ருத்தி செய்தாகி உள்ளது. வித்வத் ஸதஸ்ஸில் வித்வான்களை கௌரவிப்பதிலும் விஷயவிமர்ஶம் பண்ணுவதிலும்* 'सन्तोषार्थं विमृशति मुहुः सद्भिः अध्यात्मविद्यां नित्यं ब्रूते निशमयति च स्वादु सुव्याहृतानि' *என்ற உத்தரக்ருத்யத்தைச் சீரிய முறையில் அனுஷ்டித்தாகிறது.*

आचार्या वृद्धसंसेवाऽऽसादित-प्राक्तनायनाः । आदृता धुरि धर्मस्य रेजन्ते बुधसंमताः ॥ 19 ॥

'यान्यस्माकँ सुचरितानि । तानि त्वयोपास्यानि । .... ये के चास्मच्छ्रेयाँसो ब्राह्मणाः । तेषां त्वयाऽऽसनेन प्रश्वसितव्यम् । ....' *என்ற ஶ்ருதியின் படி ஜகத்விக்யாதரான இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரிடம் தாம் பால்யத்திலிருந்தே ஸூக்ஷ்மமான ஆசாரவிஷயங்களைப் ப்ரமாணங்களுடன் கேட்டறிந்ததைத் தன்னுடைய ஆஹ்னிக உரையில் பலவிடங்களில் வெளிப்படுத்தி மஹோபகாரம் செய்திருக்கிறபடி. மேல்பாக்கம் ஸ்வாமி, நாவல்பாக்கம் அய்யா ஸ்வாமி முதலிய பல மஹான்களிடம் கேட்டறிந்த பல தத்த்வங்களை ப்ராமாணிகமாக ப்ரகாஶிப்பித்திருக்கிறார். இன்று ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் தர்ம ஶாஸ்த்ர, ஆசார, பகவத்கைங்கர்யத்தில் ஒரு நிர்விவாதமாக ஏற்றுக்கொள்ளத்தக்க க்ரந்தமாக ஸ்ரீவைஷ்ண-வஸதாசாரநிர்ணயம் இருக்கிறதென்றால் மிகையாகாது.*

तेषामनुग्रहाकांक्षाप्रेरितः सन्नयं जनः । वाचिकीं व्यातनोत्सेवां दुष्टामपि कृतीभवन् ॥ 20 ॥

*ஸ்வாமி தேஶிகன் உபகாரஸங்க்ரஹத்தில் 'என்னால் தன்னை வன்கவி' பாடுகிறான் 'வைகுந்த' - நரஸிம்ஹ, 'நாதன்' என ஆழ்வார் அநுஸந்தித்தபடி,* 'अयमप्यपरो महोपकारः कलिदोषाविलचेतसां नराणाम्। करुणाजलधिः यदेष देवः प्रथयामास मया निजोपकारान् ॥' *என்று ஸாதித்தபடி, அழகியசிங்கரும் 'நீசனேன் நிறைவொன்றுமிலேன்' என உள்ள அடியேனிடத்தும் அவ்யாஜமாக அனுக்ரஹம் பண்ணி இந்த மஹோன்னதமான ஸந்தர்ப்பத்தில் ஒரு வாசிக கைங்கர்யம் கிடைக்க அருளியது அடியேனுடைய பூர்வஸுக்ருதபலம். '....* यस्मिन् प्रतिश्लोकमबद्धवत्यपि । नामान्यनन्तस्य यशोऽङ्कितानि चेत् शृण्वन्ति गायन्ति गृणन्ति साधवः ॥' *என்கிறபடியே இதை விஜ்ஞாபிக்கக் கேட்டும் அனுக்ரஹித்தாயிற்று. ஆக, இதில் குறைகளே மிகுந்திருப்பினும், ஆசார்யகைங்கர்யபுத்தியுடன் இயற்றப்பட்டிருப்பதால் மஹான்கள் ஏற்பர்கள் என நம்புகிறேன்.*

आचार्यदृष्ट्या पूतात्मा तत्कृपालब्धवित्पदः । वात्स्यो रामानुजस्तेभ्यः समर्पयति वाङ्मयम् ॥ 21 ॥

ஸூர்யனுக்குக் கற்பூர ஹாரத்தி செய்வது போல் அழகியசிங்கரின் பெருமைகளை உலகுக்கு அடியேன் தெரிவிக்கத் தேவை இல்லாதிருந்தும், அவருடைய பரமானுக்ரஹத்துடன் கூடிய 'ஆஸ்தான வித்வான்' எனும் பெயரைப் பெற்று ஆத்மலாபத்தை அடைந்ததன் பொருட்டு 'திருமலை நல்லான் சக்ரவர்த்தி சோகத்தூர் ராமாநுஜ'னெனும் அடியேன் இந்த சொல்மாலையை ஆசார்ய பாதாம்புஜத்வயத்தில் ஸமர்ப்பித்து க்ருதார்த்தனாகிறேன்.

शुभमस्तु ।